# நீர்கொழும்பு மாநகர சபை

## கம்பஹா மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 12 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி நகர ஆணையாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நீர்கொழும்பு மாநகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மதிப்பிழந்த காசோலை பதிவேட்டின் பிரகாரம் தீர்க்கப்படாத ரூபா 349,933 தொகையான 02 காசோலைகள் இறுதிக் கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆதனவரி மற்றும் நானாவித வருமானம் தொடர்பாக கிடைத்த ரூபா 913,572 தொகையான காசோலைகள் மதிப்பிழந்தமையின் காரணமாக மீண்டும் கடன்பட்டோராக கணக்கு வைக்கப்படாதிருந்தமையினால் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி ரூபா 461,297 தொகை மற்றும் நிலுவை நானாவித வருமானம் ரூபா 452,275 தொகை என்பன குறைவாகக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 04 நூலகங்களில் ரூபா 5,500,227 பெறுமதியான புத்தக இருப்பொன்று கணக்கு வைக்கப்படாதிருந்ததுடன் ஒரு நூலகத்தில் புத்தக இருப்பின் உள்ளபடியான பெறுமதியை விட ரூபா 1,618,922 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஹெல்மில்டன் எல படகு சார்ந்த சேவைகள் மூலம் 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையிலான கால எல்லைக்குரியதாக அறவிடப்பட்ட ரூபா 1,740,970 தொகையான வருமானம் மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டிற்குரியதாக செலுத்த வேண்டிய ரூபா 175,452 தொகை கடன் கொடுத்தோராக கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முன்னைய ஆண்டில் முற்பணமாகக் கிடைத்த ஆதனவரிப் பெறுமதி ரூபா 7,859,300 ஆக இருந்த போதிலும் மீளாய்வாண்டின் வருமானத்திற்கு ரூபா 7,010,892 தொகையே எடுக்கப்பட்டிருந்தமையினால் ஆதனவரி வருமானம் ரூபா 848,408 தொகை குறைவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(எ) உப அலுவலகம் மற்றும் பிரதான அலுவலகம் என்பவற்றினால் ஆதனவரி கழிவாக அறிக்கை இடப்பட்ட சரியான பெறுமதி ரூபா 5,541,526 ஆக இருந்த போதிலும் ரூபா 7,676,857 தொகை ஆதனவரிக் கணக்கில் பதிவழிக்கப்பட்டமையால் ஆதனவரி வருமானம் ரூபா 2,135,331 குறைவாகவும் வழங்கிய கழிவு அப்பெறுமதியால் அதிகரித்தும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஏ) முன்னைய ஆண்டிற்காக மீளாய்வாண்டில் கிடைத்த பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதியுதவிகள் ரூபா 10,460,231 தொகை மீளாய்வாண்டின் வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஐ) மீளாய்வாண்டில் உடன்படிக்கை செய்யப்பட்ட 79 செயற்திட்டங்களுக்குரிய ரூபா 45,025,617 பெறுமதிக்காக 2017 திசெம்பர் 31 இல் கடன்கொடுத்தோர் ஒதுக்கம் ஏற்படுத்தப்படவில்லை.

(ஒ) மீளாய்வாண்டிற்குரியதாக கிடைக்க வேண்டிய பன்முகப்படுத்தப்பட்ட மற்றும் மாகாண சபை நிதி உதவியான ரூபா 34,660,742 தொகை மீளாய்வாண்டின் வருமானத்திற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட 07 கணக்கு விடயங்களுக்குரிய கணக்குகளின் பிரகாரமான மீதிக்கும், அத்திகதியில் உள்ளவாறான உப பதிவேடுகளின் பிரகாரமான மீதிக்கும் இடையில் ரூபா 20,126,189 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டில் 05 வருமானம் தொடர்பான நிதிக்கூற்றுக்களுக்கும் பேணிச் செல்லப்பட்ட பதிவேடுகளுக்குமிடையே ரூபா 2,014,288 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெற வேண்டிய கணக்குகள்**

(அ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியான ரூபா 1,538,573 தொகையில் ரூபா 1,298,850 பெறுமதியான 84 காசோலைகள் 05 வருடங்களுக்கும் 25 வருடங்களுக்குமிடையே அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மதிப்பிழந்த காசோலை இலக்கம் அல்லது உரிமையாளர் இனங்காணப்படாத ரூபா 281,589 பெறுமதியான 12 காசோலைகளை இனங்கண்டு தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,315,735 தொகையான நானாவித கடன்பட்டோர் பெறுமதியில் ரூபா 2,578,048 தொகை 10 வருடங்களுக்கு மேற்பட்ட காலமாக கொண்டு வரப்பட்டிருந்ததுடன் அவற்றை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 கணக்காய்விற்குத் தேவையான எழுத்து மூல சான்றுகள் இன்மை

பட்டோலைகளின் சமர்ப்பிக்கப்படாமையினால் ரூபா 61,348,204 தொகையான களஞ்சிய இருப்புக்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் |
|---|---|---|
| | ரூபா | |
| (அ) மாநகர சபைகள் கட்டளைச் சட்டம் 247(அ) | - | இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்துள்ள ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிடங்களின் அனுமதிப்பத்திரக் கட்டணமான ஆண்டின் வருமானத்தில் 1 சதவீதத்திற்கு விஞ்ஞாமல் இருக்க வேண்டிய போதிலும் அதற்கு முரணாக அறைகளின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | |
| (i) நிதிப்பிரமாணம் 110(1) | - | நட்டம் மற்றும் இழப்பு தொடர்பான பதிவேடொன்று பேணப்பட்டிருந்த போதிலும் இழப்பு தொடர்பான விபரங்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை |
| (ii) நிதிப்பிரமாணம் 396 | 449,709 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்டிருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத 06 மாதங்களை விஞ்சிய ரூபா 449,709 பெறுமதியான 49 காசோலைகள் தொடர்பான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 571 | 923,961 | 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நானாவித வைப்புக் கணக்கில் 02 வருடங்களை விஞ்சிய மீதிகளை ஓய்வுபெறச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 1645 | - | தீயணைப்பு பிரிவிற்குச் சொந்தமான கெப் வண்டி நகர ஆணையாளரின் பணிகளுக்காக பயன்படுத்தப்பட்ட சந்தர்ப்பங்களின் போது நாளாந்த ஓட்ட அட்டவணைகளில் ஆணையாளரால் கையொப்பம் இடப்பட்டிருக்கவில்லை. |

(இ) மேல் மாகாண பிரதம செயலாளரின் 2016 பெப்ரவரி 29 ஆந் திகதிய 01/2016 ஆம் இலக்க நிர்வாகச் சுற்றறிக்கை

| | | | |
|---|---|---|---|
| (i) | 1.2.2 ஆம் பிரிவு | | உத்தியோகபூர்வ வாகனம் உரித்துடைய உத்தியோகத்தருக்கு ஏனைய குழாம் வாகனமொன்றைப் பயன்படுத்துவதற்கு உரித்து இல்லாதிருந்த போதிலும் ஆணையாளரால் உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக வேறு வாகனமொன்று ஒரே திகதியில் பயன்படுத்தப்பட்டிருந்தது. |
| (ii) | 1.2.3 ஆம் பிரிவு | | நகர ஆணையாளரால் தமது உத்தியோகபூர்வ வாகனத்திற்கு மேலதிகமாக பயன்படுத்தப்பட்ட வாகனத்திற்காகவும் எரிபொருள் வழங்கப்பட்டிருந்தது. |
| (iii) | 1.3 ஆம் பிரிவுகள் 1.3.2 உப பிரிவு | | குழாம் வாகனத்திற்காக கடமை தேவைகளின் அடிப்படையில் மாதாந்த எரிபொருள் எல்லை நிறுவன தலைவருக்கு நிர்ணயிக்க முடியுமாக இருந்த போதிலும், 2017 நவம்பர் 24 ஆந்திகதிய NMC/2/5/390 ஆம் இலக்க நகர ஆணையாளரின் கடிதத்தின் மூலம் 03 வாகனங்களுக்கு மேலதிகமாக அவரின் உத்தியோகபூர்வ வாகனத்திற்காகவும் ஆணையாளரால் எரிபொருள் எல்லை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 173,281,595 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 130,889,540 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 | ரூபா'000 |
| வீதவரியும் வரியும் | 149,069 | 163,911 | 151,189 | 106,455 | 152,399 | 158,772 | 152,311 | 103,794 |
| வாடகை | 26,427 | 34,959 | 33,671 | 17,276 | 22,884 | 26,501 | 24,835 | 15,973 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 45,384 | 67,431 | 67,431 | 3,879 | 40,128 | 45,815 | 45,542 | 9,779 |
| ஏனைய வருமானம் | 259,679 | 221,196 | 221,196 | 7,155 | 230,050 | 205,212 | 204,900 | 9,564 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனவரி வருமானம் 02 சதவீதத்தினால் குறைவடைந்திருந்ததுடன் மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனவரி வருமானத்தை விட சிட்டையிடல் 10 சதவீதத்தினால் அதிகரித்தமையால் சாத்தியமான முறையில் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டில் வாடகை வருமான நிலுவை அதிகரித்திருந்தது.

#### 2.2.2 வீதவரியும் வரியும்

**ஆதனவரி**

(அ) 2017 சனவரி 01 இல் உள்ளவாறு ரூபா 125,395,698 தொகையான நிலுவையில் அறவிடல் ரூபா 470,832,027 ஆனமையால் நிலுவை அறவிடல் சதவீதம் 37.55 ஆக இருந்தது.

(ஆ) வட்டார இலக்கம் 05 இல் ஆதனவரி இலக்கம் 355 என்ற ஹோட்டலில் 2014 முதல் 2018 ஆகஸ்ட் வரை ஆதனவரி மதிப்பீடொன்று வழங்கப்படாதிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது ஆதனவரியாக ரூபா 33 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 2017 ஆம் ஆண்டு வரையிலும் நிலையான மதிப்பீடொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் காலாண்டிற்கு ரூபா 675,278 தொகை அறவிடப்பட்டிருந்தது.

(இ) வட்டார இலக்கம் 12 இல் ஆதனவரி இலக்கம் 772 என்ற நிலையத்தில் வியாபாரத்திற்காக 2014 ஆம் ஆண்டின் போது வாகன விற்பனை நிலையமாக ரூபா 2,531 தொகை வீதம் ஆதனவரி அறவிடப்பட்டிருந்ததுடன் அது பின்னர் விழா மண்டபத்துடன் சுற்றுலா ஹோட்டல் ஒன்றாக திருத்தப்பட்டிருந்த போதிலும் ரூபா 2,531 தொகையான ஆதனவரிக் கட்டணம் மாற்றமின்றி 2017 ஆம் ஆண்டு வரையும் அறவிடப்பட்டு இருந்தது.

(ஈ) வட்டார இலக்கம் 08 இல் ஆதனவரி இலக்கம் 169 என்ற கொழும்பு வீதி என்ற இடத்தில் அனுமதியற்ற கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காகப் பின்னர் ஆதனவரி இலக்கமும் வழங்கப்பட்டு தற்காலிக மதிப்பீட்டின் அடிப்படையில் ஆதனவரி அறவிடப்பட்டிருந்தது. அனுமதியற்ற நிர்மாணம் மேற்கொள்ளப்பட்ட சந்தர்ப்பத்தில் அதற்காக உரிய பிரிவு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(உ) இணையத்தளம் மூலம் தரவிறக்கம் செய்யப்பட்ட ஹோட்டல் பட்டியலின் பிரகாரம் அவற்றின் ஆதனவரி அறவிடல் தொடர்பாக 05 மற்றும் 04 ஆம் இலக்க வட்டார ஆதனவரி பதிவேடுகளில் தெரிவுப் பரிசோதனை செய்யப்பட்டதுடன் அதன் பிரகாரம் ஹோட்டல் / 28 வியாபார நிலையங்களுக்காக வீடுகளுக்குரிய ஆதனவரி சதவீதத்தின் அடிப்படையில் கட்டணம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 வாடகை**

--------------

**கடை வாடகை**

-------------------------

(அ) சபைக்குச் சொந்தமான 36 கடைகளுக்காக 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மேலும் கிடைக்க வேண்டிய கேள்வி நிலுவைப்பணம் ரூபா 19,616,279 ஆக இருந்ததுடன் 216 கடைகளுக்காக வாடகை நிலுவை மீதி ரூபா 3,674,183 ஆகக் காணப்பட்டது. அந்தப் பணத்தை அறவிடுவதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கடைத்தொகுதி A கட்டிடத்தின் கடைகளை வாடகைக்கு வழங்கும் போது கேள்வி நிபந்தனை 05 இன் பிரகாரம் இரண்டாம் தரப்பினர்களுக்கு கடைகளை தேவையற்றதாக இருப்பின் சபைக்கு மீண்டும் கையளிக்க வேண்டி இருந்தமை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் தொடர்ச்சியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்வி முறைமைக்குப் புறம்பாக உரித்து ஒவ்வொரு நபருக்கும் கையளிக்கப்பட்டிருந்தது. இந்தக் கட்டிடத்தின் 102 கடைகள் 1987 ஆம் ஆண்டின் போது வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அதற்காக 2006 ஆம் ஆண்டின் போது கிடைத்த மதிப்பீட்டின் பிரகாரம் வாடகை அறவிடப்படாது சபை தீர்மானத்தின் அடிப்படையில் குறைந்த கட்டணம் அறவிடப்பட்டமையின் காரணமாக ஒரு மாதத்தின் போது ரூபா 298,925 வீதம் 2006 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரை சபையினால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 40,653,800 ஆகும்.

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

#### (அ) வியாபார அனுமதிப்பத்திரம்

(i) மீளாய்வாண்டிற்காக வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் அறவிடப்படாது வியாபாரம் நடாத்தி செல்லப்பட்ட நீர்கொழும்பு அலுவலகத்தில் 08 நிறுவனங்களின் இருந்து அறவிடுவதற்கு இருந்த ரூபா 28,414 தொகை தொடர்பாக சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) இணையத்தளம் மூலம் தரவிறக்கம் செய்யப்பட்ட பட்டியலின் பிரகாரம் சபைக்குரிய அதிகாரப் பிரதேசத்தில் அமைந்துள்ள இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் அங்கீகரிக்கப்பட்ட 153 ஹோட்டல், சிற்றுண்டிச் சாலை மற்றும் தங்குமிடங்களில் 81 ஹோட்டல், சிற்றுண்டிச்சாலை மற்றும் தங்குமிடங்கள் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.

#### (ஆ) வியாபார வரி

மீளாய்வாண்டிற்காக வியாபார வரி அறவிடப்படாது நடாத்திச் செல்லப்பட்ட நீர் கொழும்பு அலுவலகத்தில் 05 வியாபார நிறுவனத்திலிருந்து அறவிடுவதற்கு இருந்த ரூபா 16,962 தொகை தொடர்பாக சபையினால் சட்டரீதியான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 ஏனைய வருமானம்

(அ) 2017 ஆம் ஆண்டின் கழிவுப் பொருள் அகற்றும் கட்டணத்தின் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் ரூபா 2,500,000 ஆக இருந்த போதிலும் சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 365,000 ஆனமையால் மதிப்பீட்டு இலக்கு அடையப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான காமச்சோடை மீன் விற்பனைக் கடைக்கு அருகில் உள்ள வீதியில் தரித்து வைக்கப்படுகின்ற வாகனத்திற்காக கட்டணம் அறவிடல் வெல்ல வீதி மதஸ்தலம் மூலம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் சபைக்குச் சொந்தமான அதன் உரித்தை வெளிநபர்களுக்கு / நிறுவனங்களுக்கு கையளித்தல் தொடர்பான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

மாநகர சபைகள் கட்டளைச்சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) செயல் நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட 25 பணிகள் நிறைவேற்றப்படவில்லை.

**(ஆ) நிறைவேற்றப்படாத இலக்குகள்**

(i) உடன்படிக்கை செய்யப்பட்ட ரூபா 9,546,311 பெறுமதியான 18 ஒப்பந்தங்கள் சபையினால் இரத்துச் செய்யப்பட்டிருந்தது.

(ii) சபையினால் 2017 ஆம் ஆண்டின் பாதீட்டின் மூலம் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட ரூபா 5,000,000 பெறுமதியான 08 செயல் திட்டங்கள் நிறைவேற்றப்படவில்லை.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

ஐக்கிய நாடுகளின் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்பான 2030 ஆம் ஆண்டின் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை தெளிவுபடுத்தியிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

(அ) பொது மக்கள் முறைப்பாட்டு பதிவேட்டின் பிரகாரம் 2016 ஆம் ஆண்டில் கிடைத்த 85 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 78 உம், 2017 ஆம் ஆண்டில் கிடைத்த 101 பொதுமக்கள் முறைப்பாடுகளில் 86 உம் தீர்க்கப்படாதிருந்ததுடன் அந்தப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மாநகர சபைக்குரிய காமச்சோடை சந்தைக்கு அருகில் சபைக்குரிய காணியில் 12 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக சபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

(அ) பேரூந்து நிலைய திறந்த மண்டபத்தில் 24'x38' சதுர அடி அளவான பிரதேசத்தில் 01 அடி நீளமும் 01 அடி அகலமும் ஆன அளவில் பொருத்தப்பட்டிருந்த டைல் கழன்றிருந்தது. மேலும் அதில் 23 ஆம் இலக்கக் கடை மற்றும் அதற்கு மேலுள்ள கடை என்பன ஒரு கேள்விதாரரினால் பெறப்பட்டு அதன் மேல்மாடிக்கு செல்வதற்கான படிக்கட்டுக்கள் அமைப்பதற்காக அதன் கொங்கிறீட் தட்டை உடைத்து அந்தப் பகுதியை காட்போட் மூலம் மூடப்பட்டிருந்தது. இது தொடர்பாக எந்த நடவடிக்கையும் சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நீர்கொழும்பு ராஜபக்ஷ பூங்காவில் காணப்பட்ட அரிதான மரம் விசேடமாக கம்மாலு, பாறமாற மரம் மற்றும் மேலும் சில மரங்கள் பிரதேச செயலகம் மற்றும் மாவட்ட வன உத்தியோகத்தர்களின் அனுமதியின்றி ஆபத்தை விளைவிக்கும் மரங்களை அகற்றுதலின் கீழ் வெட்டுவதற்கு சபை உத்தியோகத்தரினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வெட்டப்பட்ட கம்மாலு மரம் கூறுகளாக்கப்பட்டு, 28 பகுதிகள் அளவில் இலக்கமிடப்பட்டு அளப்பதற்கு வசதியீனமான முறையில் போடப்பட்டிருந்தது. பாரிய சுற்றளவைக் கொண்ட பாறமாற மரம் ரூபா 32,675 இற்கு மதிப்பீடு செய்யப்பட்டு 2018 பெப்ரவரி 23 ஆந் திகதியளவில் அகற்றப்பட்டிருந்ததுடன் அந்தக் கூறுகளின் அளவு எவ்வளவு என அறிக்கையிடப்பட்டிருக்கவில்லை. மரம் வெட்டுதல் தவிர ஏனைய நடவடிக்கைகள் சபையின் தொழிலாளர்களைக் கொண்டு செய்யக்கூடியதாக இருக்கும் போது அதற்காக தொழிலாளர் கூலியாக ரூபா 69,000 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) நீர்கொழும்பு கடைத்தொகுதியின் F கட்டிடத்தின் 15 கடைகளில் 14 கடைகளும், புதிய பேருந்து நிலைய கடைத்தொகுதியில் தரைமாடியில் ஒரு கடையும், முதலாவது மாடியில் 06 கடைகளும், இரண்டாவது மாடியில் திறந்த மண்டபமும், கடைத்தொகுதி D கட்டிடத்தில் 03 கடைகளும் மற்றும் சபைக்குரிய 07 வெற்று நிலக் கூறுகளும் வாடகை அடிப்படையில் வெளித்தரப்பினர்களுக்கு 2002 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை உடன்படிக்கை கைச்சாத்திடப்படாமல் வழங்கப்பட்டிருந்தன.

(ஈ) கடைத்தொகுதி A கட்டிடத்தின் கடைகள் 1986 ஆம் ஆண்டு முதல் தொடர்ச்சியாக கேள்வி கோரப்படாமல் வாடகையாளர்களுக்கிடையே மாற்றப்பட்டிருந்ததுடன் வாடகைக்கு வழங்கும் போது இலகுவான முறையில் உடன்படிக்கைகளில் நிபந்தனைகள் இட்டு சபையினால் அதற்காக வசதிகள் வழங்கப்பட்டிருந்தன. 54 கடைகளில் 10 கடைகளின் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அந்தக் கடைகள் ஒவ்வொரு நபருக்குமிடையே மாற்றப்பட்டிருந்த சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை 3 முதல் 7 வரையாக இருந்தது.

(உ) சபைக்குச் சொந்தமான காணிக் கூறுகளில் கடைகளை நிர்மாணிப்பதற்காக தனியார் துறைக்கு வாடகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2018 யூலை 18 ஆந் திகதி வரையிலும் 25 காணிக் கூறுகளில் கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதில் 11 வெற்று நிலக்கூறுகள் அளவில் கேள்வி கோரியதன் பின்னர் கடைகளை நிர்மாணிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருந்தன. கடைகளை நிர்மாணிப்பதற்கான வரைபடத்திட்டம் அங்கீகரிக்கப்படாதிருந்ததுடன் சில கடைகள் இதுவரையில் மூன்றாவது மாடிவரை நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

(ஊ) காமச்சோட புதன்கிழமை சந்தையை 2017 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கும் போது கிடைத்த ஆகக்கூடிய கேள்வியின் பெறுமதி ரூபா 18,252,000 ஆக இருந்ததுடன் வெற்றியீட்டிய கேள்விதாரரின் கேள்வியைக் கையேற்றல் நிராகரிக்கப்பட்டமையால் ரூபா 13,572,000 தொகையான இரண்டாவது கேள்விதாரருக்கு சந்தை வாடகைக்கு வழங்கப்பட்டமையின் காரணமாக சபைக்கு இழக்கப்பட்ட வருமானம் ரூபா 4,680,000 ஆகும். முதலாவது கேள்விதாரர் கேள்வியை நிராகரித்ததன் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைப்பதற்காக 2016 திசெம்பர் 21 ஆந் திகதிய முகாமைத்துவ தீர்மானத்தின் மூலம் வங்கி பிணை முறியான ரூபா 1,000,000 தொகையில் ரூபா 500,000 தொகையை சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கேள்விதாரருடன் சட்டரீதியான உடன்படிக்கையை ஏற்படுத்துவதற்காக தேவையான கேள்வி நிபந்தனைகள் சபையினால் பூர்த்தி செய்து / காண்பிக்காமையின் காரணமாக அந்தப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(எ) காமச்சோட ஞாயிறு சந்தையை 2017 ஆம் ஆண்டிற்காக வாடகைக்கு வழங்கும் போது கிடைத்த ஆகக்கூடிய கேள்விப் பெறுமதி ரூபா 22,816,500 ஆக இருந்ததுடன் 2016 திசெம்பர் 15 ஆந் திகதி வெற்றியடைந்த கேள்விதாரரின் கேள்வியைத் கையேற்றல் நிராகரிக்கப்பட்டமையின் ரூபா 18,603,000 தொகையான இரண்டாவது கேள்விதாரருக்கு கேள்வி வழங்கப்பட்டமையின் காரணமாக சபை இழந்த வருமானம் ரூபா 4,213,500 ஆகும். முதலாவது கேள்விதாரர் கேள்வியை நிராகரித்தமையின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட நட்டத்தைக் குறைப்பதற்காக 2016 திசெம்பர் 31 ஆந் திகதிய முகாமைத்துவக் குழு தீர்மானத்தின் மூலம் வங்கி பிணை முறியான ரூபா 1,000,000 தொகையில் ரூபா 500,000 தொகையை சபைக்கு உரித்தாக்கிக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், கேள்விதாரருடன் சட்டரீதியான உடன்படிக்கையைச் செய்து கொள்வதற்காக தேவையான கேள்வி நிபந்தனைகள் சபையினால் பூர்த்தி செய்து / காண்பிக்கப்படாமையின் காரணமாக பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்தது.

(ஏ) சனிக்கிழமை இரவு சந்தையை 2017 ஆம் ஆண்டிற்காக வாடகைக்குப் பெற்ற வாடகையாளரினால் 2017 யூன் 10 ஆந் திகதி ஒரு தரப்பு உடன்படிக்கையிலிருந்து விலகியிருந்ததுடன் உடன்படிக்கை கைவிடப்பட்டமையின் காரணமாக சபைக்கு ஏற்பட்ட ரூபா 1,304,928 தொகையான நட்டத்தையும் பொருட்படுத்தாமல் 2017 யூலை 20 ஆந் திகதிய முகாமைத்துவக் குழு தீர்மானத்தின் கீழ் 2017 ஆகஸ்ட் 27 ஆந் திகதி ரூபா 1,672,312 தொகையான கேள்வி வைப்புப் பணம் விடுவிக்கப்பட்டிருந்தது. வாடகையாளருடன் சட்டரீதியான உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக் கொள்வதற்காக தேவையான கேள்வி நிபந்தனைகள் சபையினால் பூர்த்தி செய்து / காண்பிக்கப்படாமையின் காரணமாக அந்தப் பணத்தை அறவிடுவதற்கு முடியாதிருந்ததுடன் உடன்படிக்கையை மீறிய கேள்விதாரரை கறுப்பு பட்டியலில் இடுவதற்கும் சபை நடவடிக்கை எடுக்காமையின் காரணமாக இரண்டாவது தடவை கூறுவிலை கோரும் போது அவரும் மீண்டும் கேள்வி கோரியிருந்தார்.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பொருள் மெய்மையாய்வு

(அ) மெய்மையாய்வு செய்து சபைக்கு சொந்தமான ஆதனங்களை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குச் சொந்தமான 127 வாகனங்கள் மீளாய்வாண்டிற்காக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

#### 3.4.2 சொத்துக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமை

(அ) நீர் கொழும்பு நகரத்தில் ரமணி மாவத்தையில் அமைந்துள்ள 25.4 பேர்ச் அளவான பொதுக் காணியிலும் ரிதிவெலி வீதியில் 01 றூட் 20.5 பேர்ச் அளவான காணியிலும் அனுமதியற்ற வகையில் வெளித்தரப்பினர்களினால் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு தனிப்பட்ட பாவனைக்காக ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

(ஆ) சபைக்குச் சொந்தமாக காணப்படுகின்ற 334 காணிகளில் 100 காணிகளுக்கான உரித்துறுதி சபையிடம் காணப்படவில்லை.

#### 3.4.3 விளைவற்ற சொத்துக்கள்

தலாதுவ முன்பள்ளிப் பாடசாலைக்கு அருகிலுள்ள நெசனல நடாத்திச் செல்லப்பட்ட நகர சபைக் கட்டிடம் எந்தப் பயன்பாட்டிற்கும் எடுக்கப்படாமல் கைவிடப்பட்டிருந்தது.

### 3.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியேற்பாட்டின் கீழ் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மூலம் 2013 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட சாமச்சோடை வாராந்த சந்தையில் 04 புதிய கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கும், பழைய கட்டிடத்தைத் திருத்துவதற்கும் மற்றும் மலசல கூடங்களுக்கு தேவையான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 151,025,802 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரையிலும் 04 புதிய கட்டிடங்களில் ஒரு கட்டிடமும், திருத்தப்பட்ட பழைய கட்டிடத்தில் ஒரு பகுதியில் பாரியளவான குறைபாடுகளினால் பாவனைக்கு எடுக்கப்படாதிருந்ததுடன் உபகரணங்களில் 216 ஆடை இறாக்கைகள் மற்றும் 95 மரக்கறி இறாக்கைகள் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் இந்த கட்டிடத்திற்காக 2013 ஆம் ஆண்டில் முதல் அரைப் பகுதி முதல் 10 வருடங்கள் கட்டணம் இன்றி பராமரித்தல் மற்றும் பொறுப்புக் காலம் காணப்பட்ட போதிலும் அந்தக் கட்டிடம் எந்தவித பராமரிப்பும் செய்யப்பட்டிருக்கவில்லை.

வாராந்த சந்தை நிர்மாணிக்கப்பட்டு பூர்த்தி செய்யப்படும் போது கட்டிடத்தில் பாரியளவான 30 குறைபாடுகள் காணப்படுகின்றமை அறிக்கை இடப்பட்டிருந்ததுடன் 2017 ஒக்டோபர் 27 ஆந் திகதி வரையிலும் அந்தக் குறைபாடுகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

### 3.6 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பொருட்கள் கிடைப்பதற்கு முன் வெளி நிறுவனத்தின் பெயரில் காசோலை எழுதி சபையின் சில உத்தியோகத்தர்களுக்கு கையளித்து அதனை உத்தியோகத்தர்களுக்கு வழங்கிய முற்பணமாகக் குறிப்பிட்டு, பொருட்கள் கிடைத்ததன் பின்னர் நிறுவனத்திற்குச் செலுத்தும் போது முற்பணத்தைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. 1986 ஆம் ஆண்டு முதல் அவ்வாறு விநியோகிக்கப்பட்டிருந்த ரூபா 17,028,297 தொகையான 363 காசோலைகள் தீர்த்து வைக்கப்படாதிருந்ததுடன் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் அவ்வாறு காசோலை எழுதி கட்டளையிடப்பட்ட திகதி முதல் பொருட்களின் பெறுவனவு 01 வருடம் முதல் 05 வருடங்கள் வரை தாமதமான 06 சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

### 3.7 பெறுகைகள்

#### 3.7.1 பெறுகைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக சபையினால் பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

#### 3.7.2 வழங்கல் மற்றும் சேவைகள்

(அ) நீர்கொழும்பு மாநகர சபையை உள்ளடக்கிய வேறு இடங்களுக்காக 2015 சனவரி 01 முதல் 2017 திசெம்பர் 31 வரை 03 வருடங்களுக்கு பாதுகாப்பு சேவை வழங்குவதற்கு மதிப்பீட்டுக் குழுவினால் பாதுகாப்பு நிறுவனமொன்று சிபாரிவு செய்யப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனை 8 இன் பிரகாரம் ரூபா 10 இலட்சம் வங்கிப் பிணைமுறியொன்று பெறப்படாதிருந்ததுடன் நிபந்தனை 15 இன் பிரகாரம் சபைக்கு ஏற்பட்ட நட்டம் மற்றும் இழப்புக்களுக்காக ரூபா 10 இலட்சத்திற்கு குறையாத இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் பொறுப்பு உரித்துறுதியின் மூலம் பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2015 சனவரி 29 ஆந் திகதி வரை செல்லுபடியாகும் ரூபா 100,000 தொகையான பிணை உறுதியே பெறப்பட்டிருந்தது. தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் தெரிவு செய்யப்பட்ட 2 ஆவது கேள்விதாரரின் விலையினை விட 1 ஆவது கேள்விதாரரின் விலை நிலையப் பொறுப்பு உத்தியோகத்தரின் சம்பளம் ரூபா 35 இனாலும் காவலரின் சம்பளம் ரூபா 9 இனாலும் அதிகரித்தமை என்பன சிறிய அதிகரிப்பாகக் கருதி 1 ஆவது கேள்விதாரர் தெரிவு செய்யப்பட்டிருந்தார். சிக்கலான முறையில் கொடுப்பனவு செய்யப்பட்ட நிலையப் பொறுப்பு உத்தியோகத்தர் 124 பேர்களுக்கும், 1,100 சாதாரண பாதுகாப்பு காவலர்களுக்காகவும் 03 வருடங்களுக்காக செலுத்தப்படாமையினால் ரூபா 200,160 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது.

(ஆ) 2014 ஒக்தோபர் 03 முதல் 2017 ஒக்தோபர் 03 வரை 03 வருட கால எல்லையில் பிரதான பேரூந்து நிலையம் மற்றும் அதற்கு அருகாமையிலுள்ள சுற்றாடலை சுத்தப்படுத்துவதற்காக மதிப்பீட்டுக் குழுவினால் கோரப்பட்டுள்ள தகைமைகள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட கூறுவிலைகளைக் கருதி ரூபா 280,000 தொகையான கூறுவிலை சமர்ப்பித்த தனியார் கம்பனியொன்று பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. எனினும், பரிந்துரையை பொருட்படுத்தாமல் நிதிக்குழுவினால் அதனை விட கூடிய விலையான ரூபா 392,157 தொகை சமர்ப்பித்திருந்த வேறொரு நிறுவனம் தெரிவு செய்யப்பட்டமையால் மாதமொன்றிற்கு ரூபா 112,157 வீதம் 03 வருடங்களுக்காக ரூபா 4,620,862 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்தது. உடன்படிக்கையின் நிபந்தனை 2 இன் பிரகாரம் பகல் காலத்தின் போது ஒரு பரிசோதகரும் நான்கு

தொழிலாளர்களும், இரவு வேளையின் போது நான்கு தொழிலாளர்களும் சேவையில் ஈடுபடுத்த வேண்டியிருந்த போதிலும், 2017 செப்தெம்பர் 29 ஆந் திகதிய களப் பரிசோதனையின் போது பகல் நேரத்தில் மூன்று தொழிலாளர்களும் ஒரு மேற்பார்வையாளரும், இரவு நேரத்தின் போது நான்கு தொழிலாளர்களும் ஒரு மேற்பார்வையாளரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். மேலும் உடன்படிக்கையின் 10 ஆவது பிரிவின் பிரகாரம் மூன்றாம் தரப்பினருக்கு மூன்றாம் மாடியை வாடகைக்கு வழங்கும் போது அந்த மாடியையும் மண்டபத்தையும் தினந்தோறும் சுத்தம் செய்ய வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மாநகர சபையின் நூலகக் கட்டிட நிர்மாணத்திற்காக ஆலோசனை நிறுவனமொன்று தெரிவு செய்வதற்கு கூறு விலை கோரும் போது நீர்கொழும்பு பிரதேசத்தில் குடியிருக்கும் ஆலோசனையாளர்களுக்கு முன்னுரிமை வழங்கும் படி செய்திப் பத்திரிகை அறிவித்தலில் பிரசுரிக்கப்படாதிருக்கும் போது நிதிக் குழுவினால் வதிவிடத்திற்காக முன்னுரிமை வழங்கி 2012 ஆம் ஆண்டில் சபை அமுல்படுத்திய செயல் திட்டங்களுக்காக தெரிவு செய்யப்பட்ட ஆலோசனை நிறுவனமே 2013 ஆம் ஆண்டில் பொது நூலகத்திற்காகவும் தெரிவு செய்யப்பட்டு உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. மதிப்பீட்டுப் பெறுமதியில் 3 சதவீதமான ஆலோசனைக் கட்டணம் 06 கட்டங்களின் கீழ் செலுத்துவதற்கு இருக்கும் போது அதன் 4 ஆவது கட்டம் வரை ரூபா 3,656,534 தொகை செலுத்தப்பட்டு 2015 யூன் 07 ஆந் திகதி வணிக வசதிகளுடன் உள்ள நூலகமொன்றை நிர்மாணிப்பதற்கு மீண்டும் திட்டத்தைத் தயாரிக்குமாறு மேற்கூறப்பட்ட ஆலோசனைக் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஆலோசனைக் கட்டணம் 3 சதவீதத்திற்குப் பதிலாக 6 சதவீத கட்டணத்திற்கு உடன்படிக்கை செய்யப்படாமையினால் ஆலோசனைக் கட்டணம் ரூபா 5,223,620 முதல் ரூபா 11,146,615 வரை ரூபா 5,922,995 இனால் அதிகரித்திருந்ததுடன் அதற்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு பரிந்துரை செய்திருக்கவில்லை. உடன்படிக்கை செய்வதற்கு முன் திட்டமிடல் சரியான முறையில் சபையினால் மேற்கொள்ளாமையினால் 2017 செப்தெம்பர் 20 ஆந் திகதி வரையிலும் அந்தத் தொகையால் சபைக்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.

### 3.7.3 ஒப்பந்த நிர்வாகம்

(அ) 2000 ஆம் ஆண்டில் நிர்மாணிக்கப்பட்ட குறன மேஜர் ராஜ் விளையாட்டரங்கில் அமைந்துள்ள மலம் அகற்றும் முறைமை 2010 ஆம் ஆண்டளவில் முழுமையாக செயற்பாடற்றமையின் காரணமாக 2014 சனவரி மாதத்தில் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் நிறுவனமொன்று தெரிவு செய்யப்பட்டிருக்கும் போது வேறொரு கம்பனியின் செயல்திட்ட முன்மொழிவொன்று சமர்ப்பிக்கப்படாமையால் அதுவும் அமுல்படுத்தப்படாமையின் அடிப்படையில் மீண்டும் 02 வருடங்களுக்குப் பின்பு கூறுவிலை கோரப்பட்டு பெறுமதி சேர் வரியுடன் (வட்) ரூபா 10,378,500 தொகையில் பூர்த்தி செய்வதற்கு 2014 சனவரி மாதத்தில் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்துடன் 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதி 03 மாதங்களில் பூர்த்தி செய்வதற்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. சரியான காலத்தில் தீர்மானம் எடுக்காமையினால் 02 வருட தாமதத்தின் காரணமாக ரூபா 3,907,800 தொகையான நட்டமொன்று சபைக்கு ஏற்பட்டிருந்ததுடன் அவ்வாறே காலம் தாழ்த்தியமையினால் 2014 ஆம் ஆண்டு முதல் குறணயில் இருந்து ஜாஎல ஏக்கலையில் அமைந்துள்ள நீர் வழங்கல், வடிகாலமைப்புச் சபைக்கு சபை மற்றும் தனியார் நிறுவனம் மூலம் கழிவு நீரை அகற்றுவதற்காக கூட்டுமொத்தமாக ரூபா 10,153,475 தொகை சபையினால் செலுத்தப்பட்டிருந்தது. 2017 ஏப்ரல் 10 ஆந் திகதி வரை இந்தச் செயல்திட்டத்தின் திகதி நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 வரையிலும் மலம் அகற்றும் முறைமை அமைக்கப்பட்டு பூர்த்தி செய்வதற்கு சபை தவறி இருந்ததுடன் 2017 மே மற்றும் யூலை மாதம் வரை

தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்தப்பட்ட ரூபா 517,500 தொகை சபைக்கு நட்டமாக இருந்தது.

(ஆ) மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 5,285,603 தொகையான நகர ஆணையாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தின் 06 வேலை விடயங்களின் மதிப்பீட்டுக் கிரயம் மற்றும் ஒப்பந்தகாரரால் சமர்ப்பிக்கப்பட்ட கிரயம் என்பவற்றுக்கிடையே போதியளவான முரண்கள் அவதானிக்கப்பட்டதுடன் அதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 7:9:11(அ) இன் ஏற்பாடுகளின் பிரகாரம் கேள்விதாரர்களிடமிருந்து அளவிடை பகுப்பாய்வொன்று கோரப்பட்டிருக்கவில்லை. இந்த 6 விடயங்களைத் தவிர ஏனைய முரண்கள் தொடர்பாக 2017 மார்ச் 30 ஆந் திகதி தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினால் காரணங்கள் ஆராயப்பட்ட போதிலும் அது கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. மேலும் உடன்படிக்கை செய்யப்பட்ட திகதி முதல் 06 மாதகால எல்லையில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்ட வேண்டி இருந்த போதிலும் 2018 யூலை 20 ஆந் திகதி வரை ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்படாமையினால் பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.14.1 இன் ஏற்பாடுகளை பொருட்படுத்தாமல் மதிப்பீடு தயாரிக்கும் போது ஏற்பட்ட சில குறைபாடுகளைக் காண்பித்து சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பந்தகாரரின் கால நீடிப்பின் கோரிக்கைக்காக அங்கீகாரம் வழங்கப்பட்டு 2018 சனவரி 02 ஆந் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் தாமதக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக் காலத்தை நீடித்ததன் காரணமாக செயலாற்றல் காப்புறுதியின் காலத்தை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2018 ஆகஸ்ட் 03 ஆந் திகதியளவில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் டைல் பதித்தல், கதவு, யன்னல் உப பாகங்கள் மற்றும் மின் உபகரணங்கள் பொருத்துதலில் 20 குறைபாடுகளைக் காணக்கூடியதாக இருந்தன.

(இ) கொச்சிக்கடை அதிகாரப்பிரதேசத்தில் கழிவுப்பொருட்களை அகற்றுவதற்காக 2014 செப்தெம்பர் 01 ஆந் திகதி முதல் 2017 ஆகஸ்ட் 01 ஆந் திகதி வரை 03 வருட காலத்திற்கு முறையே ரூபா 1,755,600, ரூபா 1,843,380 மற்றும் ரூபா 1,935,549 தொகை என்ற பெறுமதிகளுக்கு தனியார் நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் பிரகாரம் மொத்த வருடாந்தப் பெறுமதியில் 5 சதவீதமான ஏற்றுக்கொள்ளப்பட்ட அரச வணிக வங்கியொன்றில் பாதுகாப்பு வங்கி பிணை முறியொன்று சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் வருடாந்தப் பெறுமதியில் 5 சதவீதமான ரூபா 1,053,360 தொகையான வங்கிப் பிணை அவ்வாறே பெறப்பட்டு எஞ்சிய 02 வருடங்களுக்காகவும் அந்த பிணை அவ்வாறே பெறப்பட்டிருந்தது. 2018 யூலை 31 ஆந் திகதி வரை இந்த உடன்படிக்கை மீண்டும் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் அந்தக் காலத்திற்காக பாதுகாப்பு வங்கிப் பிணை முறியொன்று பெறப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 12 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது ஆணையாளரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டிருந்ததுடன் கீழே குறிப்பிடப்படுகின்ற கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விசேட கவனம் செலுத்தவேண்டியுள்ளது.

| முறைமைகள் | | குறைபாடுகள் | |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கணக்குகளுக்கு கொண்டுவரப்படாமை காணப்பட்டமை. |
| | | (ii) | மீதிகள் வேறுபாடின்றி காணப்பட்டமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | முற்பணம் மற்றும் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | வருமானங்களை அறவிடல் புதிய வழிகளுக்கு தொடர்புபடுத்தப்படாமை |
| (இ) | செயற்திட்டக் கட்டுப்பாடு | (i) | ஆலோசனையாளர்களை தெரிவு செய்தலில் நலிவு காணப்பட்டமை |
| | | (ii) | நிர்மாணங்களில் குறைபாடுகள் காணப்பட்டமை |
| (ஈ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | வாகன மெய்மையாய்வு இடம்பெறாமை |
| | | (ii) | வாகன விபத்துக்கள் தொடர்பாக விசாரணை நடாத்தப்படாமை |
| (உ) | சொத்துக் கட்டுப்பாடு | (i) | சொத்துக்களின் பாதுகாப்பு தொடர்பாக நடவடிக்கை எடுக்காமை |
| | | (ii) | பொதுச் சொத்துக்களை முறையற்ற வகையில் பயன்படுத்துவதற்கு சந்தர்ப்பம் அளித்தமை |